REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 85630

நம் நாடு

தி. மு. க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily ✱ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: மாசி 3உ வியாழன் (14 2 57) ★ ★ வெளியீடு: மாசி 4உ வெள்ளி (15—2—57) [இதழ் 213

தென்மண்டலக் கவுன்சில் தலைமைப்பீடம் சென்னையில் அமையுமாம்

தென்மண்டலக் கவுன்சிலின் தலைமை நிலையம் சென்னையாக இருக்கும் என்றும், இந்த முடிவு ஆந்திர—கேரள—சென்னை மாநிலங்களுக்கு அறிவிக்கப்பட்டுவிட்டது என்றும் தெரியவருகிறது.

இந்த மாநில அரசுகளின் பிரதம செயலாளர்கள், மாறி மாறி கவுன்சிலின் செயலாளர்களாக இருப்பர் என்றும், இந்த மாநிலங்களைச் சேராத ஒருவர் கவுன்சிலின் நிரந்தர துணைச்செயலாளராயிருப்பார் என்றும் கூறப்படுகிறது.

கையாலாகாதவர்களின் கடைசி பாணம்

காஞ்சி தேர்தல் கூட்டத்தில் குழப்பம் விளைவிக்க முயற்சி

இழிசெயலில் ஈடுபட்டோர் முகத்தில் மக்கள் கரி பூசினர்

காஞ்சிபுரத்தில், அண்ணா அவர்களை ஆதரித்து நடைபெற்ற தேர்தல் கூட்டம் ஒன்றில் தோழர் மு கருணாநிதி அவர்கள் பேசிக்கொண்டிருக்கையில், கையாலாகாத சிலர் தங்களின் கடைசி பாணமான கல்லெறியும் இழிசெயலில் ஈடுபட்டு கூட்டத்தில் குழப்பம் விளைவிக்க முயன்று தோல்வி கண்டிருக்கிறார்கள்.

இந்தக் கூட்டத்தில் நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி தோழர்கள் மதியழகன், கண்ணதாசன் ஆகியோர் பேசியதும் தோழர் மு கருணாநிதி பேசிக்கொண்டிருந்தார்.

அப்போது யாரோ சிலர், கூட்டத்தின்மீது மேடையை நோக்கி இரண்டு கற்களை வீசினர்.

ஆனால் கல்லடியும் சொல்லடியும்பட்டே வளர்ந்து வந்திருக்கும் தி. மு. கழகத்தவரை இந்தக் கல்லெறியும் காலித்தனத்தால் அச்சுறுத்திவிட முடியாது என்பதை அவர்களுக்கு உணர்த்தும் வகையில் தொடர்ந்து தோழர் கருணாநிதி அவர்கள் முழக்கமிட்டார்.

இழிசெயலில் ஈடுபட்ட கையாலாகாதவர்களின் முகத்தில் கரி பூசப்பட்டது; கூட்டம் தொடர்ந்து அமைதியாக நடைபெற்றது. கூடியிருந்த மக்கள் எவரும் கலைந்து செல்லவில்லை.

ஏலம்

"கலகலத்துப்போன காங்கிரஸ் கட்டிடத்தின் கடைசிக் கற்கள் இவை"

என்று கூறி அண்ணா அவர்கள் அந்த இரு கற்களையும் ஏலத்தில் விட்டார்.

கூட்டத்திலிருந்த பெருமாள் என்ற தோழர் அந்தக் கற்களை ரூ 115 தந்து எடுத்துக்கொண்டபோது கூடியிருந்த மக்கள் பேராரவாரம் செய்தனர்.

குழப்பமூட்டிக் கூட்டத்தைக் கலைத்துவிட நினைத்தவர்கள், கூடியிருந்த மக்கள் கையில் அகப்படாமல், தப்பி விட்டனர்! ஓடி ஒளிந்துவிட்டனர்!

மக்களின் கடுங்கோபம்

பம்பாய் முதன் மந்திரி பேச முடியாது திணறடித்தனர்

பம்பாய், பிப். 13—

பம்பாய் முதன் மந்திரி சாவன், பம்பாய் நகர்ப்புறத்தில் கூட்டம் ஒன்றில் பேசும்போது கூடியிருந்த மக்களின் கடுங்கோபத்திற்கு ஆளாகியிருக்கிறார்.

மாநில புது அமைப்பு விவகாரம் பற்றி அவர் பேசமுற்பட்டதும் கூட்டத்திலிருந்தவர்கள், பெண்கள் உட்பட 'எங்களுக்கு சம்யுக்த மராட்டியம் வேண்டும்; சாவனே திரும்பிப் போ,' என்று முழக்கமிட்டிருக்கிறார்கள்.

கூட்டத்தில் ஒரு மூலையிலிருந்து யாரோ சிலர் செருப்புகளையும் முதன் மந்திரிமீது வீசியிருக்கிறார்கள்.

பேச முடியவில்லை

இந்த ஆர்ப்பாட்டங்களால் எழுந்த நிலையினால், சாவன் ஒரு இருபது நிமிட நேரம் பேசமுடியவில்லையாம்!

தொடர்ந்து அவர் ஆர்ப்பாட்டக்காரர்களின் குரலுக்கு இடையே பேசுகையில், "ஏற்கனவே நடைமுறைக்கு வந்துவிட்ட ஒரு முடிவு இது போன்ற ஆர்ப்பாட்டங்களால் மாற்றப்பட முடியாது; இருமொழி பம்பாய் மாநிலம் அமைந்தது அமைந்ததுதான்,' என்று ஆணவத்தோடு பேசினாராம்!

வாக்குப் பதிவு நிலையங்களில் பெண்கள்!

அலகாபாத், பிப். 13—

அலகாபாத்தில், பெண்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ள 90 வாக்குப் பதிவுச் சாவடிகளை, முழுவதும் பெண் அதிகாரிகளே கண்காணிப்பராம்!

இந்த ஏற்பாடு குறித்து மாவட்டத் தேர்தல் அதிகாரி பல கட்சிப் பிரதிநிதிகளிடம் கூறியிருக்கிறார்.

ஒவ்வொரு கிராமத்திலும் பெண்களுக்கெனத் தனி வாக்குப் பதிவு நிலையங்கள் திறக்க வேண்டுமென்ற கோரிக்கையை அவர் நிராகரித்திருக்கிறார்.

அணைக்கட்டு அருகே விமான நிலையம்

ஐதராபாத், பிப். 12—

நாகார்ஜுனசாகர் அணைக்கட்டிற்கு அருகில் ஒரு ஆகாய விமான நிலையம் கட்டுவதற்கென இடம் தேடப்பட்டு வருகிறதாம். இதற்கென ஆந்திர முதலமைச்சர் என். சஞ்சீவி ரெட்டியைத் தலைவராகக் கொண்ட நாகார்ஜுனசாகர் கண்ட்ரோல் போர்டு ஒன்று இரண்டு இடங்களில்—அந்த அணைக்கட்டுக்கு இடது புறத்திலும் வலது புறத்திலுமாக—தேர்ந்தெடுத்துள்ளதாகத் தெரிகிறது. 'சர்வே' வேலைப்பாடுகள் எல்லாம் முடிவான பின்னர், சென்னை விமான நிலைய கண்ட்ரோலர் இது குறித்து இறுதி முடிவு அறிவிப்பார் என்று தெரிகிறது.

திராவிட நாடு இலட்சியம்: மத்திய அமைச்சரின் குழப்பம்

தண்டனையிலிருந்து தனது எசமானர்களையும் தன்னையும் தப்புவிக்க முயற்சி?

டி. டி. கிருஷ்ணமாச்சாரியாரின் சாகசப் பேச்சு

"திராவிட நாடு கிடைத்தால், இராணுவம் எப்படி வைத்துக் கொள்வார்கள், இவர்களிடத்தில் பணம் ஏது? சென்னை மாநில வருமானமே ஆண்டு ஒன்றுக்கு சுமார் 54 கோடி ரூபாய்தானே!"

என்று சந்தேகம் கிளப்பினாராம், டி டி கிருஷ்ணமாச்சாரி—மத்திய நிதி மந்திரி!

திருச்சிக் கூட்டம் ஒன்றில் பேசிய அவர் மேலும் கூறினாராம்

"தி. மு. கழகத்தினர், சுதந்திரத் தமிழகம் வேண்டுமெனக் கேட்கிறார்கள்; ஆனால் சுதந்திரத் தமிழ் நாடு கிடைத்தால், மக்களுக்கு அதிகமான சாலைகள், குடிதண்ணீர் வசதிகள், பள்ளிகள் எல்லாம் எப்படித் தர முடியும் ?"

என்று வேறு கேட்டாராம், இந்தியப் பேரரசின் நிதி அமைச்சர்!

இப்போது இவர் எஜமானர்களாக ஏற்றுக்கொண்டிருக்கிற வடநாட்டு ஏகாதிபத்தியவாதிகள் ஆட்சியினால்தான் இந்த நாட்டு மக்களுக்கு அவர் கூறியுள்ள வசதிகள் எல்லாம் கிடைப்பது போலவும், சுதந்திரத் தமிழகம் அமைந்தால், அவை கிடைக்காதது போலவும் அவர் பேசினாராம்!

உண்மையல்லவாம்!

சென்னைக் கூட்டம் ஒன்றில் பேசிய அதே டி. டி. கிருஷ்ணமாச்சாரியார், தனது வடநாட்டு எஜமானர்களின் காட்டுமிராண்டித்தனமான நயவஞ்சகத்திற்குத் தானும் உடந்தையாயிருக்கும் துரோகச் செயலை தமிழ் நாட்டு வாக்காளர் கண்ணிலிருந்து மறைத்துவிடுவதற்காக, 'தென்னாடு வடவரால் அலட்சியப்படுத்தப்படுகிறது என்பது உண்மையல்ல,' என்று துணிந்து பொய் பேசினாராம்!

இந்தப் பொய்கள் மூலம் தன்னையும் தனது வடநாட்டு எசமானர்களையும், தமிழ் மக்கள் தங்களுக்குத் தேர்தலின்போது தரவிருக்கும் தண்டனையிலிருந்து தப்புவித்துக்கொள்ள முயற்சித்தார்போலும்!

விசித்திர விவாதம்!

பொன்மலைக் கூட்டம் ஒன்றில் பேசுகையில் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் சொன்னாராம்—

"தி. மு. கழகம் இந்தியாவைத் துண்டாட வேண்டும் என்கிறது; இரயில்வேக்களையும் துண்டு போட்டு, 'இரயில்கள் சென்னைவரையில்தான் ஓடலாம்; அதற்குமேல் ஓடக்கூடாது' என்று தி. மு. கழகத்தினர் கூறினால், அதனால் இரயில்வே தொழிலாளருக்கு இலாபமா?" என்று வேறு கேட்டாராம்!

இவரது 'அரசியல் தெளிவு' எத்தகையது என்பதைக் காட்டும் இந்தக் கேள்வியைக் கேட்ட மக்கள், கைகொட்டிச் சிரித்திருக்கிறார்கள்!

தேர்தல் நேரத்தில் சர்க்கார் காட்டும் சுறுசுறுப்பு

ஊழியர்கள் கண்ணில் மண்ணைத் தூவவா?

சென்னை, பிப் 13—

சென்னை சர்க்கார் ஊழியர்களின் இப்போதைய சம்பளம் கிராக்கிப் படி, வீட்டு வாடகை முதலியன பற்றிய விவரங்களையும், அதிகமாகத் தருவதாகக் கூறியுள்ள கிராக்கிப் படி உயர்வு பற்றிய விவரங்களையும் டில்லி சர்க்காருக்கு சென்னை சர்க்கார் அறிவித்துள்ளனராம்.

டில்லி சர்க்காரிடம், தங்கள் ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு தருவதற்காக இந்த மாநில சர்க்கார் நிதி உதவி கோரியபோது டில்லி சர்க்கார் இந்த விவரங்களைக் கேட்டிருந்தனராம்; அதன்படியே இப்போது மாநில சர்க்கார் அனுப்பி வைத்துள்ளனராம்.

அகில இந்திய அடிப்படையில்

பல மாநிலங்கள், இதுபோல டில்லியிடம் உதவி கேட்டிருக்கின்றனவாம். எனவே, மாநில சர்க்கார் ஊழியர்களுக்கு ஊதிய உயர்வுதரும் பிரச்சினை, அகில இந்திய அடிப்படையிலேயே பரிசீலிக்கப்படுமாம்.

45,000 மைல்வரையில் பூமிக்குக் கீழ் வெடிப்பு!

ஐந்தாண்டு ஆராய்ச்சி தெளிவாகும் உண்மை

பூமிக்குள்ளே கடலுக்குக் கீழ் 45,000 மைல் வரையில் ஒரே தொடர்ச்சியாக வெடிப்பு ஒன்று இருக்கிறது என்பதைக் கொலம்பியா பல்கலைக் கழக விஞ்ஞானிகள் உறுதிப்படுத்திவிட்டனராம்.

20 மைல் அகலமும் ஒன்றரை மைல் ஆழமும் உள்ள வெடிப்பு ஒன்று கடலுக்குக்கீழ் இருக்கிறது என்பதை ஐந்து ஆண்டு ஆராய்ச்சி வெளிப்படுத்தியுள்ளதாம்.

இந்த வெடிப்பு வட அட்லாண்டிக், தென் அட்லாண்டிக் கடல்களின் வழியாய் ஆப்பிரிக்காவை யொட்டிவந்து இந்து மகாசமுத்திரத்துக்கு வருகிறது; அங்கிருந்து அரேபியக் கடலில் பிரிந்து செல்கிறது.

வேறொரு பிரிவு தென்துருவ மண்டலத்துக்கும் நியூசிலாந்துக்கும் இடையே செல்கிறது.

'அராபிய தேசீயத்தை உருவாக்க விரும்புகிறோம்'

எகிப்தியத் தலைவர் நாசர் கருத்து

"அராபிய உலகம் இன்று அராபிய தேசீயத்தை நிர்மாணிப்பதில் ஒன்றுபட்டு நிற்கிறது. நாம், எத்தனை கஷ்டங்களை அனுபவிக்க நேரினும், இந்தப் பாதை வழி நடந்தே தீருவோம். இது கஷ்டமான பாதைதான்.

"ஆனால், இந்தப் பாதையை விட்டால் நமக்குள்ள அடுத்த பாதை பெரிய நாடுகளின் தொண்டர்களாயிருப்பதுதான். ஆனால் நாம், சுதந்திரமாக, கௌரவத்தோடு—உரிமையோடு வாழ விரும்புகிறோம்"

என்று, எகிப்தியத் தலைவர் நாசர் சிரியா நாட்டு மாணவர் கூட்டம் ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

சென்னை 14—2—'57 வியாழன்

இதுவா தமிழர் பற்று?

திராவிட முன்னேற்றக் கழகம், தென்னாட்டை வடநாடு சுரண்டி வாழ்ந்து வருகிறது எனப் பேசிவருவதினால், வடநாட்டில் வாழ்ந்துவரும் ஆறு இலட்சம் தமிழர்களின் எதிர்காலம் பாழாகிவிடும் என நிதி அமைச்சர் கிருஷ்ணமாச்சாரியார், அங்கலாய்த்து இருந்தார். அவருடைய அங்கலாய்ப்பில் உள்ளடங்கியுள்ள உண்மையை நேற்று அம்பலமாக்கினோம். இன்றும் அதைத் தொடர்ந்து சில கூறவிருக்கிறோம்.

தென்னாட்டை வடநாடு சுரண்டி வருகிறது என நமது கழகம் கூறிவருவதின் விளைவாக வடநாட்டில் உள்ள ஆறு இலட்சம் தமிழர்களை விரட்டி அடிக்க வடநாட்டினர் முன்வருவர் என, நிதி அமைச்சர் ஆச்சாரியார் அறிவித்துள்ளார். அந்த அறிவிப்பின் பொருள் என்ன?

தமிழ்நாட்டில் இருந்து சென்றிருக்கும் ஆறு இலட்சம் தமிழர்கள் அனைவரும், வடநாட்டின் நிரந்தரக் குடிகள் அல்லர் — அவர்கள்மீது வடநாட்டினர் கோபங்கொண்டு விரட்டியடிக்கவும் கூடும்—அத்தகு நிலை ஏற்படுமானால் அங்குள்ள தமிழர்கள் அனைவரும் தமிழ் நாட்டிற்குத் திரும்பிவிட வேண்டியவர்களே யாவர் — அதைவிட அவர்களுக்கு வேறு வழியே கிடையாது—என்ற உண்மையை ஆச்சாரியார் அறிந்தோ அறியாமலோ அறிவித்துள்ளார்.

மற்றொரு உண்மையும் அதில் அடங்கி இருக்கிறது. அதாவது, நமது கழகம் ஆச்சாரியார் குறிப்பிட்டுள்ளதுபோல் பேசினாலும் பேசாமற் போனாலும், வடநாட்டினர் கோபங்கொண்டாலும் கோபங் கொள்ளாமல் இருந்தாலும் அங்குள்ள ஆறு இலட்சம் தமிழர்களும் இன்றைக்கில்லையானாலும் நாளை, நாளை இல்லையானாலும் என்றைக்காவது தங்கள் வாழ்நாளில் ஒரு நாள், தாங்கள் பிறந்தமண்ணான தமிழ்நாட்டிற்குத் திரும்ப வேண்டியவர்கள் தான்—அத்தகு நிலையில்தான் வடநாட்டிலுள்ள ஆறு இலட்சம் தமிழர்களின் வாழ்க்கை நிலை அப்பகுதியில் ஒட்டு உறவு இல்லாமல் இருந்து வருகிறது—என்றப் பேருண்மையும் ஆச்சாரியார் பேச்சிலிருந்து தெளிவாகிவிட்டது. அதுவுமன்றி, வடநாட்டிலேயே தங்கி வாழ்ந்து தீரவேண்டிய கட்டாயத்தை உண்டாக்கக்கூடிய வகையில், அங்குள்ள ஆறு இலட்சம் தமிழர்களுக்கும் ஆசையா உடைமைகள் இல்லை என்பதும் நிதி அமைச்சர் கூற்றிலிருந்து விளக்கமாகத் தெரிந்துவிட்டது.

இதைத் தெளிவுபடக் கூற வேண்டுமானால்; வடநாட்டில் உள்ள ஆறு இலட்சம் தமிழ் மக்களுள் பெரும்பான்மையினருக்கு, அங்கு சொந்தத்தில் வீடோ நிலமோ கிடையாது என்றும், என்றைக்கிருந்தாலும் துணியை உதறித் தோளில் போட்டுக்கொண்டு, தமிழ்நாடு திரும்ப வேண்டிய கதியற்ற நிலை இருந்துவருகிறது.

அங்கு சென்றுள்ள ஆறு இலட்சம் தமிழர்களில் பெரும் எண்ணிக்கையினர், அரசாங்க ஊழியர்களாய், ஆலைத் தொழிலாளர்களாய், தொழிற்சாலை குமாஸ்தாக்களாய், எடுபிடி கூலிகளாய், தமிழ்த் தாயகம் திரும்பும் கருத்தினராயும் நிலைபற்ற வாழ்வினராயும் இருந்து வருகின்றனர் என்பதும் ஆச்சாரியார் பேச்சு தெளிவாக்குகிறது.

மற்றொரு மகத்தான உண்மையும் தெளிவாகத் தெரிகிறது. அதாவது, பல்லாண்டுக் காலமாக ஆறு இலட்சம் தமிழர்கள் வடநாட்டில் உயிர் வாழ்ந்துவந்தபோதிலும், வடநாட்டினர் தென்னாட்டினர் எனப் பிரித்துப் பார்க்கக் கூடிய வகையில்தான், உறவு கலக்காது வாழ்ந்து வருகின்றனர் என்றப் பேருண்மையும் ஆச்சாரியார் வாக்கிலிருந்து அம்பலமாகி இருக்கிறது.

என்றைக்கிருந்தாலும், வடநாட்டில் உள்ள ஆறு இலட்சம் தமிழர்களில் பெரும் எண்ணிக்கையினர் பிறந்த பூமிக்கு ஓடிவர வேண்டிய அபாயம் இருந்து வருமானால், அவர்கள் மானம் பறிபோவதற்கு முன்பே, அவர்கள் அனைவரையும் தமிழகத்தில் வரவேற்று வாழ வசதி செய்து தர, டில்லி ஆதிபத்தியம் தானாக முன்வருவது அல்லவா விரும்பத்தக்கதாகும்? தென்னாட்டையும் என்றென்றும் கட்டியாள வேண்டும் என வீணான கனவு கண்டுகொண்டு இருக்கும் டில்லி ஏகாதிபத்தியம், இத்துறையில் இது எடுத்துக் கொண்டுள்ள நடவடிக்கை என்ன? நிற்க.

நமது கழகத்தின் வடநாடு தென்னாடு பேச்சால் வடநாட்டில் உள்ள ஆறு இலட்சம் தமிழர்களின் எதிர்காலம் பாழாகிவிடுமே என ஒப்பாரி வைக்க முன்வந்துள்ள நிதி அமைச்சருக்கு உண்மையிலேயே தமிழ் மக்கள்மீது பற்றும் பாசமும் இருக்கிறதா என நாம் கேட்கிறோம். ஆறு இலட்சம் தமிழர்களின் எதிர்கால வாழ்வு குறித்து கவலை கொள்ளும் நிதி அமைச்சருக்கு தமிழகத்திலேயே வேலையில்லா கொடுமைக்கு ஆளாகி, பஞ்சம் பட்டினிக்கு பலியாகி, தொத்து நோய்களுக்கு இரையாகி சீரழிந்துவரும் மூன்று கோடி தமிழ் மக்களின் அவல வாழ்வு குறித்து கவலை ஏற்படாதது ஏன்? அவருடைய தமிழ் மக்கள் பற்றுதலில், சொந்த நாட்டிலேயே நடைப்பிணங்களாக வாழும் பல இலட்சக்கணக்கான தமிழ் மக்களுக்கு அறவே இடமில்லாது போனதேன்?

மூன்று கோடி தமிழ் மக்கள் எக்கேடாவது கெட்டொழியட்டும், வடநாட்டில் உள்ள ஆறு இலட்சம் தமிழர்களின் எதிர்கால நலனுக்குப் பாதகமேற்படாமல் பார்த்துக்கொண்டால் போதுமானது என்று நிதி அமைச்சர் எண்ணி இருக்கிறாரா?

என்றோ ஒருநாள் ஓடியப் போகிறார்கள் சில இலட்சம் பேர் எனத் தாமாகக் கருதிக் கொண்டு, சொந்த நாட்டில் மரணத்தின் பயங்கரப் பிடியில் சிக்கி, கண்ணீர் சிந்திக் கிடக்கும் கோடிக்கணக்கான தமிழ் மக்கள் எழுப்பும் வேதனைக் குரலை, மிக மிகச் சாதாரணமானது என முடிவு கட்டிப் பேசுவதுதான், நிதி அமைச்சரின் தமிழர் பற்று போலும்! நல்ல அமைச்சர்! நல்ல தமிழர் பற்று! நல்ல வாதம்!

இதுவா தமிழர் பற்று?— இப்படியா இருக்கும் தமிழர் பற்று?

நிதி அமைச்சருக்கு இருப்பது தமிழர் பற்றுமல்ல—தமிழ்நாட்டுப் பற்றுமல்ல. பதவிப் பற்று! பணப்பற்று! அவருடைய வாழ்க்கையே அதற்கு சான்று!

காங்கிரஸ் ஆட்சியில் மக்கள் படும் வேதனை!

★ தபால்-தந்தி ஊழியர் வேலை நிறுத்தம்

புதுடில்லி, பிப் 12— அசாம் வட்டாரப் பகுதிகளிலுள்ள தபால்-தந்தி ஊழியர்கள் இன்று முதல் திடீரென வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கின்றனர். இதனால் டில்லி வட்டாரங்களில் பெரும் பரபரப்பும் ஆச்சரியமும் நிலவி வருவதாகக் கூறப்படுகிறது.

பொதுத் தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கிற இந்தச் சிக்கலான நேரத்தில் இப்படித் திடீரென ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்யமாட்டார்கள் என்ற நம்பிக்கை டில்லி வட்டாரத்தினருக்கு நேற்று வரையிலும் இருந்ததினாலேதான், இந்தச் செய்தி பரபரப்பை யூட்டியிருக்கிறதாம்!

சர்க்கார் ஊழியர்களுடைய கோரிக்கைகள் குறித்துக் கவலையுடன் கவனிப்பதற்கான ஒரு நடவடிக்கையாக அசாம் மாநிலத்திலுள்ள ஊழியர்களுக்குச் சர்க்கார் விசேட அலவன்ஸ் தரவேண்டுமென்ற கோரிக்கைக்காக நேரடி நடவடிக்கை எடுப்பதென மேற்சொன்னப்பட்ட முடிவொன்றை தபால்-தந்தி இலாகாக்களின் ஊழியர் சங்கத்தவர் கடந்த டிசம்பர் மாதம் ஐதராபாத்தில் சந்தித்த போது, சிறிது காலத்திற்கு ஒத்திப் போடுவதென முடிவு செய்திருந்தனர்.

இந்தக் கோரிக்கைகள் குறித்து மேற்படி ஊழியர் சங்கத்தின் பிரதிநிதிகளுக்கும் மத்திய செய்திப் போக்குவரத்து அமைச்சருக்குமிடையில், வருகிற பிப்ரவரியில் பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதாக முன்னர் குறிப்பிடப்பட்டிருந்தது.

★ கள் இறக்குவோர் சத்தியாக்கிரகம்

வாரங்கல், பிப் 11— இங்கு நடைபெற்ற கள் இறக்குவோர் சத்தியாக்கிரக நிகழ்ச்சி ஒன்றில் 17 பெண்களும் கலந்துகொண்டிருக்கின்றனர் இவர்களில் இரண்டு பேர் 70 வயதையும் தாண்டிவிட்டவர்கள் என்று அறிவிக்கப்படுகிறது.

வாரங்கல் நகரையும், அதனைச் சுற்றியுள்ள சுமார் 25 கிராமங்களிலும் உள்ள கள் இறக்குவோருக்கு அப்பகுதியைச் சேர்ந்த கள்ளுக்கடை காண்டிராக்டர்கள் வேலை கொடுக்க மறுத்து, கள் இறக்கும் தொழிலையே நம்பி வரும் சுமார் 2000 பேரை வேலையிலிருந்து நீக்கிவிட்டதை எதிர்த்து கடந்த 21-ந் தேதியே இந்த 'சத்தியாக்கிரகம்' ஆரம்பமானது.

அன்று முதல், சட்ட விரோதமாக அவர்களெல்லாம் கள் இறக்கினர் என்பதும், இதனால் 300 பேர் கைது செய்யப்பட்டனர் என்பதும், ஆனால் இடையில் சில சுமூகமான முறையில் சிக்கலுக்குப் பரிகாரம் தேடப்பட்டு வந்ததையொட்டி இந்த சத்தியாக்கிரகம் நிறுத்திவைக்கப்பட்டதும், இவைகளினால் எவ்விதப் பயனுமில்லாது போகவே, நேற்று முதல் மீண்டும் இந்தச் சத்தியாக்கிரகம் துவக்கப்பட்டுள்ளதென்பதும் குறிப்பிடத்தக்கவையாகும்.

★ இரயில்வே அதிகாரிகள் சர்பள மறுப்புப் போராட்டம்

குண்டக்கல், பிப். 12— ஸ்டேஷன் மாஸ்டர்கள், உதவி ஸ்டேஷன் மாஸ்டர்கள் சங்கத்தை அங்கீகாரம் செய்யவேண்டும்—அடிப்படை ஊதியத்தை உயர்த்த வேண்டும்—பதவி உயர்வு செய்வதின் மூலம் மட்டுமே காலியான இடங்களைப் பூர்த்திசெய்யவேண்டும்—இலவச வீடு வசதிகள் செய்து தரப்படவேண்டும்—அவர்களுடைய குழந்தைகளுக்கு தாராளமான முறையில் கல்வி வசதி செய்து தரப்படவேண்டும் — இவைபோன்ற பல அம்சங்களை உள்ளடக்கிய அகில இந்திய ஸ்டேஷன் மாஸ்டர்கள், உதவி அதிகாரிகள் சங்கத்தவர் கொடுத்திருந்த கோரிக்கைகளை சர்க்கார் இதுவரை நிறைவேற்றித் தராததற்குத் தங்கள் கண்டனத்தைத் தெரிவிக்கும் முறையில மேற்படி சங்கத்தவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க தென்பகுதி இரயில்வேயில் உள்ள குண்டக்கல் டிவிஷனைச் சேர்ந்த ஸ்டேஷன் மாஸ்டர்களும் உதவி ஸ்டேஷன் மாஸ்டர்களும் கடந்த சனிக்கிழமையன்று தங்கள் ஜனவரி மாத ஊதியத்தைப் பெற்றுக்கொள்ள மறுத்து விட்டிருக்கின்றனர்.

இந்தச் 'சத்தியாக்கிர'கத்தில், அந்த டிவிஷனைச் சேர்ந்த 27 அதிகாரிகளில் ஒருவர் நீங்கலாக மற்ற 26 பேரும் கலந்துகொண்டிருக்கின்றனர்.

வெறிபிடித்த கணவனும் காங்கிரஸ் கட்சியும்!

அண்ணா காட்டும் உவமை

அடிமடியில் கையைப் போட்டு வரியை வாங்குவது காமராசர் வேலை!

அதனைத் தட்டிப் பறித்துச் செல்வது நேரு பண்டிதர் வேலை!

5—2—57 அன்று காஞ்சியில் நடைபெற்ற தேர்தல் கூட்டம் ஒன்றில், அண்ணா அவர்கள் ஆற்றிய கருத்துரையின மற்றொரு பகுதி இங்கு தரப்படுகிறது :—

"'காங்கிரஸ் சிறுத்துக்கொண்டிருக்கிறது. ஏற்கனவே காங்கிரசு கழுதை மாதிரி இருந்தது; போன தேர்தலில் அது பன்றியாயிற்று; இந்தத் தேர்தலுக்குப் பிறகு அது கட்டெறும்பாகி மறைந்துவிடும்' —இது காமராசரை ஆதரிக்கின்ற பெரியாரின் பேச்சு!

"பலபேர் எண்ணிக்கொண்டிருக்கின்றார்கள் — 'பெரியாருக்கும் எனக்கும் ஏதோ பகை வந்துவிட்டது; ஆகையினால் கழகம் புகுந்துவிடலாம்' என்று காங்கிரஸ்காரர்கள் மனப்பால் குடிக்கிறார்கள். நாங்கள் இரண்டுபேரும் எப்போது சந்திக்கிறோம் என்று காங்கிரஸ்காரர்களுக்குத் தெரியாது. நான் சொல்வதிலிருந்து சந்தித்துப் பேசுகிறோம் என்று அர்த்தமல்ல; இதுதான் சந்தித்துப் பேசுவது!

"காங்கிரசைப் பற்றி அவர் கொண்டிருக்கின்ற கருத்து, 'அது கழுதை; அது பன்றி; அது கட்டெறும்பு' என்பது! அவருக்கு ஏற்பட்டிருக்கின்ற அரசியல் அனுபவம் பொது வாழ்க்கையில் அவருக்குக் கிடைத்திருக்கின்ற பெரும்பேறும் எனக்குக் கிடைக்காத காரணத்தினால், நான் அவ்வளவு கடுமையான வார்த்தைகளை உபயோகப்படுத்தாமல் 'காங்கிரஸ் சர்வாதிகாரம் செய்கிறது' என்கிறேன்.

"இந்தக் காங்கிரஸ் சர்வாதிகாரத்தை வீழ்த்தவேண்டாமா? ஜனநாயகத்தை உண்டாக்க வேண்டாமா? இல்லையானால் ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை எதற்காக நமக்குத் தேர்தல்? ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை தேர்தல் வைப்பதனுடைய கருத்து என்ன? ஆட்சியிலே எப்படி நாளாக நாளாக அழுக்கு ஏறுமோ, அதைப்போல், அரசியலில் எந்தக் கட்சி அமர்ந்தாலும் நாளாக நாளாக கறை ஏறும்; ஏறுகின்ற கறையை நாட்டு மக்கள் துடைத்து நீக்க வேண்டும். நீக்குவதற்குத்தானே உங்களிடத்தில் கொண்டுவருகின்றார்கள்? வெளுப்பதற்கு உங்களிடத்திலே போடுகின்ற ஆடையை பார்த்து, எங்கே கறை இருக்கிறதென்று கண்டுபிடித்து, எத்தகைய சவுக்காரம் போட்டால் போகும் என்று கண்டுபிடித்துத் தேய்த்து எடுத்து மடித்தால்தான் உங்களுக்கு ஆட்சியிலே புதுமை கிடைக்குமே தவிர, 'பழைய கந்தையே எங்களுக்குப் போதும்' என்று சொன்னால் நாட்டில எப்படிப் புதுமை கிடைக்கும்? கிடைத்த சோப்பு சன்லைட் சோப்போ, 501 பார்சோப்போ—ஏதோ ஒரு சோப்பு—இதை வைத்து நீங்கள் வெளுத்துக்காட்டுங்கள் என்பதுதான் பொருள்.

"கட்டிய கணவன் ஆனாலும், அவன் கருத்துக்கெட்டு, மூளை குழம்பிப்போய் வெறிபிடித்தவனாக இருந்தால், சொந்த மனைவிகூட, அவன் கொஞ்சுவதற்கு அழைத்தால் பக்கத்து வீடு, எதிர் வீட்டுக்கு ஓடி ஒளிந்துகொள்ளுவாளே தவிர 'என்னைத் தொட்டுத் தாலி கட்டியவன்தானே; ஆசையோடுதானே அழைக்கின்றான்; எவ்வளவு இன்பமாக முன்னாலெல்லாம் இருந்தோம்; மறுபடியும் அப்படித்தானே இருப்போமே' என்று எந்த மனைவியும் போகமாட்டாள். ஐயோ, பைத்தியத்தில் இது ஒரு ரகம் போலிருக்கிறது; பாவதி— ஓடிவா; ஏகாம்பரம் இங்கே வா— கந்தப்பா கதவைத் தாள்போடு' என்று சொல்லிவிட்டு வெளியே போவாளே தவிர, பித்தம் பிடித்த கணவனிடத்தில் எந்த மனைவியும் சரசமாடமாட்டாள்.

"இன்றையத் தினம் காங்கிரஸை விட்டு பலபேர் போகிறார்கள் என்றால், என்ன அர்த்தம் அதற்கு? தொட்டுத் தாலி கட்டிய கணவன் என்றாலும், அவனுக்குக் கொஞ்சம் மூளைக்கோளாறு ஏற்பட்டுவிட்டது என்று பயந்து ஓடுகிற மனைவியைப்போல், வி. கே. இராமசாமி முதலியார் ஓடுகிறார்—ஜெயராம ரெட்டியார் ஓடிவிட்டார்—வெங்

(4-ம் பக்கம் பார்க்க)

இரும்புத் தாதுப்பொருள் இல்லா நாட்டில் உருக்குத் தொழிற்சாலை!

தொழிலை விரிவாக்க 20 ஆண்டுத் திட்டம்

டி. டி. கிருஷ்ணமாச்சாரிக்கு தெளிவு பிறக்குமா?

ஜப்பான் தன்னுடைய நாட்டின் பொருளாதார நிலையை உயர்த்துவதற்கென 20 ஆண்டுத் திட்டம் ஒன்றை தயாரித்திருக்கிறது. ஜப்பானிய சர்க்காரின் அங்கீகாரத்தையும், அமெரிக்க ஏற்றுமதி—இறக்குமதி பாங்கியிடமிருந்து பெற்றக் கடனையும் கொண்டு, ஜப்பான் உருக்குத் தொழில் இலாகா இந்த 20 ஆண்டுத் திட்டத்தைத் தீட்டியிருக்கிறதாம்.

இத்திட்டத்தின் விளைவாக, நாட்டின் பொருளாதாரத்துறை அபிவிருத்திக்கான தொழில் துறைகளில் இவ்வாண்டிலிருந்து புதுப் புது வகையான இயந்திரங்கள், உலைகள் ஆகியவை வேலை செய்யும் என்றும், மிகப் பெரிய இயந்திரங்கள், உலைகள் போன்றவை கூட 1958—59-ல் வேலை செய்யும் என்றும் கூறப்படுகிறது. இந்தத் திட்டத்தினால் உருக்கு உற்பத்தி அதிகரிக்கப்படுவது என்பது மட்டுமல்லாமல், நிலத்திற்கடியிலிருந்து இன்னும் ஏராளமான அளவில் இரும்புக் கனிப் பொருளைத் தோண்டியெடுப்பதும், ஜப்பானிலிருந்து வெளிநாடுகளுக்கு அவற்றை ஏற்றுமதி செய்வதின் மூலம் தன் வர்த்தகத் துறையை விரிவு செய்துகொள்வதும், எதிர்பார்க்கப்படும் பலன்களாகும்.

இந்தவகைத் திட்டங்களின் விளைவாக, மற்றுமொரு நன்மை ஜப்பானுக்கு ஏற்பட இருக்கிறது. இப்போதே ஜப்பானில் கப்பல் கட்டும் தொழில் பிரபலயமடைய ஆரம்பித்துவிட்டிருக்கிறது!

ஜப்பான் பிரதிநிதிகள் குழு இந்தியா வருகிறது!

இவ்வாண்டு ஏப்ரல் திங்கள் முதல் ரூ 2,57 00 000 பெறுமான முள்ள 4 60 000 டன் இரும்புக் கனிப் பொருட்களை ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்யவேண்டும். சென்ற ஆண்டில் இந்தியா ஜப்பானுடன் செய்துகொண்ட ஒப்பந்தம் ஒன்றையொட்டி, ஏற்றுமதி செய்யப்படும் இரும்புக் கனிப் பொருட்களின் தரம், வந்து சேரும் நாள், ஏற்றுமதி செய்யப்படும் துறைமுகங்கள் ஆகியவை பற்றிய தகவல்களைத் தெரிந்துகொள்ளவும், அது குறித்து இந்திய சர்க்கார் வர்த்தகத் துறை அமைச்சர் இலாகாவுடனும் ராஜ்ய வர்த்தக கார்ப்பொரேஷனுடனும் பேச்சு வார்த்தைகள் நடத்துவதற்கும், வருகிற 17-ந் தேதியன்று சப்பானிலுள்ள முக்கிய—பெரிய தொழில் நிறுவனங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் குழு ஒன்று இந்தியா வருகிறதாம்.

சப்பானிலுள்ள யாவாடா இரும்பு உருக்குக் கம்பெனி, ப்யூஜி இரும்பு உருக்குக் கம்பெனி, ஜப்பன் கோகன் (ஜப்பான் இரும்புக் கார்ப்பொரேஷன்) ஆகிய 'மூப் பெரும்' கம்பெனிகளைச் சேர்ந்தவர்களாம் அந்தக் குழுவினர்!

மகளிர் முன்னேற்றம்

குறையேதுமற்ற நிர்வாகம்!

கிழக்கு பிரான்ஸ், பிப். 13—

கவ்சான்சஸ் - ஆக்ஸ்டொர்ஜெஸ் என்னும் கிராமத்தில், இரண்டு உத்தியோகங்களைத் தவிர மற்ற எல்லாப் பதவிகளையும் பெண்களே நிர்வகித்து வருகின்றனராம்!

இந்த கிராமத்தின் மக்கள் தொகை 1,256 இரு பெண்களைத் தவிர மற்றெல்லோரும் மணமானவர்கள்.

இரயில் நிலையம், அஞ்சல் நிலையம், டாக்ஸி முதலிய பொதுக் காரியாலயங்களைப் பெண்களே நிர்வகிக்கின்றனராம்! அவர்களின் நிர்வாகத்தில் குறையேதும் இல்லையாம்!

பி. எஸ். செல்வா, கலைத்தூதன் குழுவினர் முகவரி

தி மு கழகத் தேர்தல் பிரச்சாரத்திற்கு தோழியர் பி எஸ் செல்வா—கலைத்தூதன் குழுவினரின் இயல், இசை நிகழ்ச்சிகள் நடத்த விரும்புவோர், 'தமிழ்ச் செல்வி அரங்கம், 1 கான்பாளையம் 2-வது தெரு, மதுரை' என்ற முகவரிக்குத் தொடர்பு கொள்ளவும்

வடநாட்டில் மேலும் ஒரு தொழிற்சாலை

குழந்தை உணவு தயாரிப்பதற்கு பம்பாயில் ஏற்பாடு

பம்பாய், பிப். 11—

குழந்தை உணவு தயாரிப்பதற்கான தொழிற்சாலையை இந்தியாவில் நிறவ டில்லி திட்டமிட்டிருக்கிறதாம்!

இதற்காக, ஏராளமான மானியம் வழங்கப்பட்டிருக்கிறதாம்!

இந்தத் தொழிற்சாலையும், வழக்கம்போல வடநாட்டில்தான் நிறுவப்படுகிறது!

இதனை, கெய்ரா மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்திச் சங்கத்தவர் நிறுவுவார்கள் என்று தெரியவருகிறது.

ஏற்கனவே இந்தச் சங்கத்தவர், குழந்தை உணவு தயாரிப்பதற்கான சோதனை முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றனராம்.

காங்கிரஸ் ஆட்சியின் அநீதி ஒழிய தி.மு.கழகத்திற்கு ஆதரவுதாருங்கள்

சென்னைக் கூட்டத்தில் கழகத் தோழர்கள் வேண்டுகோள்

9—2—57 இரவு 7-30 மணியளவில் சென்னை - இராயபுரம் ஆட்டுத் தொட்டியில் 3-வது வட்டத் தி. மு. கழகத் தேர்தல் பிரச்சாரக் கூட்டம் தோழர் பி சண்முகம் தலைமையில் நடைபெற்றது

தோழர் வை. கு. இராமதாசன் இயக்கப் பாடல்கள் பாடினார்.

தோழர்கள் பி. கே. மூர்த்தி, அன்புரோசு ஆகியோர் பேசிய பின் தோழர் பி. எம். கருணாகரன் காங்கிரசாட்சியினால் மக்கள் அடைந்த நன்மை எதுவுமில்லை என்பதை விளக்கி தெலுங்குமொழியில் சிறிதுநேரம் பேசினார்.

அடுத்தத் தோழர் க. அன்பழகன் அவர்கள் கழகத்தின் நற்பணிகளை விளக்கியும், பணத்திற்காக—பதவிக்காக தி. மு கழகம் தேர்தலில் ஈடுபடவில்லை என்பதை சான்றுகளுடன் விளக்கியும் பேசினார்.

இறுதியாகத் தோழர் என். சிவரத்தினம் அவர்கள் ஆட்சியாளர் தி. மு கழகத்தவருக்கு இழைத்து வரும் அநீதிகளைக் கண்டித்தும், தேர்தலில் தி. மு. கழக அபேட்சகர்களைப் பொதுமக்கள் ஆதரிக்குமாறு கேட்டுக்கொண்டும் உரையாற்றினார்.

[இரவு 9½ மணிக்கு மேல் கூட்டம் நடத்த அனுமதிக்க முடியாதென போலீஸ் அதிகாரிகள் அறிவித்ததை யொட்டி, கூட்டம் குறிப்பிட்ட நேரத்திற்குள் முடிந்துவிட்டது. முந்தின சனிக்கிழமையன்றும் இதே கூட்டத்திற்கு ஒலி பெருக்கி அனுமதி மறுக்கப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது.]

(ச. நி)

பண்டிதரின் பாவாடை நாடாவில் கட்டுண்டு கிடக்கிறது காமராசர் ஆட்சி!

★

கட்டுக்கதை அல்ல—கருத்துமிக்க நிலைமை விளக்கம்

தென்னாட்டில் தொழிலே துவங்கக் கூடாது;

அப்படியே துவங்கினாலும் அதனை

தென்னாட்டவர் துவங்கக் கூடாது;

என்ற

வடவரின் ஏகாதிபத்திய நோக்கினை அம்பலப்படுத்தும்

சோக வரலாறு

★

தயாரிப்பு:

ஜே. எல். பி. ரோச் விக்டோரியா

(சென்னை மாநில முன்னாள் உணவு மந்திரி, இன்றைய காங்கிரஸ் எம். எல். ஏ.)

★

நாளை!

இங்கே காணுங்கள்

தேர்தலின்போது

சுறுசுறுப்பான உத்தரவு!

சென்னை, பிப். 13—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் பற்றி ஆளவந்தார்களால் பிரமாதமாகப் பேசப்படுகிறது; ஆனால் குறைந்த பட்ச வருமானமுள்ளவர்களுக்கு திட்டத்தினால் ஏற்பட்ட நன்மை இப்போது அம்பலமாகியிருக்கிறது

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், குறைந்த வருமானமுள்ளவர்களுக்கு வீடு கட்டும் திட்டத்திற்கு ரூ. 51 03 410 கடனாக கொடுக்கப்பட்டிருக்கிறது; இதில் சென்னை நகரசபைக்கு ரூ 5 இலட்சம்; டாக்டர் அழகப்பா செட்டியார் கல்வி நிறுவனத்திற்கு ரூ 1,20,000; கல்வி டிரஸ்டுக்கு ரூ 1,20,000; கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூ 11 42,410; உள்ளாட்சிக் கழகங்களுக்கு ரூ 18 41,000 ஒதுக்கப்பட்டது.

இத்தனை முயற்சிகளும் பலன் தரவில்லை என்பதையும், குறைந்த பட்ச வருமானக்காரர்களுக்கு உருப்படியாக இன்றைய அரசாங்கம் எதும் செய்யவில்லை என்பதையும் சென்னை அரசாங்கமே ஒப்புக்கொண்டிருக்கிறது.

"குறைந்த வருமானமுள்ளவர்களுக்கு வீடு கட்டித் தரும் திட்டம் வேகமாக அமுல் நடத்தப்படவில்லை; எனவே, இந்தத் திட்டத்தை தீவிரப்படுத்த வேண்டும்" என்று சென்னை நகரசபை உட்பட எல்லா உள்ளாட்சிக் கழகங்களையும் சர்க்கார் கேட்டுக்கொண்டிருக்கிறதாம்.

தூக்குமேடை ஏறவும் தயாராம்!

கராச்சி, பிப் 12—

மேற்கு வங்காளத்துடன் பாகிஸ்தான் கொண்டுள்ள தொடர்பைக் கண்டித்தும், கிழக்குப் பாகிஸ்தானுக்கு முழு சுதந்திரம் கோரியும் கிளர்ச்சி செய்துவரும் அவாமி லீக் தலைவர் மௌலானா பாஷானியை 'ஒரு கம்யூனிஸ்டு முல்லா' என்று 'டான்' இதழ் வர்ணித்திருக்கிறது.

இம்மாதிரி [illegible] தன் மீது சில பட்டாளங்கள் [illegible] பெ தூக்கு [illegible] ல் [illegible] பாஷானி [illegible] துன் [illegible] உறுதியும் மக்களின் [illegible] அடிப்படையாகக் கொண்டதே [illegible] போராட்டம் என்றும், இதனால் தூக்குமேடை ஏற்றப்பட்டாலும் தான் அஞ்சப் போவதில்லை என்றும் குறிப்பிட்டாராம்.

இந்தியாவின் ஏற்பாடு செயலற்று விட்டது?

ஏனோ இந்த அவல நிலை?

புதுடில்லி, பிப் 11—

இந்தியாவிலிருந்து பிரிட்டனுக்கு ஏற்றுமதி செய்யப்படும் துணியினால், பிரிட்டிஷ் துணித் தொழில் விற்பனை பாதிக்கப்படுவதாகவும், எனவே ஏற்றுமதியாகும் இந்தியத் துணிகளுக்கு ஒருவரம்பு நிர்ணயிக்கப்பட வேண்டுமென்றும் இந்தியத் துணி பிரதிநிதிகளிடம் பிரிட்டிஷ் தூதுக்குழு ஒன்று வற்புறுத்தியிருக்கிறது.

பிரிட்டனுக்கு ஹாங்காங் ஏற்றுமதி செய்யும் துணிக்கு உச்சவரம்பு நிர்ணயித்தால், இந்தியாவும் அம்மாதிரி நடந்துகொள்ளுவதென்ற ஏற்பாடு ஒப்புக்கொள்ளப்பட்டது; ஆனால், உச்சவரம்பை ஹாங்காங் மறுத்துவிடவே, இந்தியாவின் ஏற்பாடு செயலற்றதாகிவிட்டதாம்!

15,700 டன் எடையுள்ள விமானந்தாங்கி கப்பல்

மூன்றாண்டு காலத்திற்குள் இந்தியா வந்து சேருமாம்

புதுடில்லி, பிப். 12—

இந்திய கடற்படைக்கு பிரிட்டிஷ் விமானந்தாங்கிக் கப்பலான 'எர்குலஸ்' வாங்கப்பட்டிருப்பதாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

15,700 டன் எடையுள்ள இக் கப்பல் இப்போது புதுப்பிக்கப்பட்டு நவீன இந்திரங்கள் பொருத்தப்பட்டு வருகிறதாம்

இந்தியாவின் முதல் விமானந்தாங்கிக் கப்பலான இது மூன்று ஆண்டு காலத்திற்குள் இந்தியா வந்து சேருமாம்.

அடுத்த ஆண்டு இறுதியில் பிரான்ஸ் தனது முதலாவது அணுகுண்டை தயாரித்துவிடுமென்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

சென்னைக்கு உதவியாம்!

புதுடில்லி, பிப். 12—

தோல் பதனிடுதல், வெல்லம், பழுப்புச் சர்க்கரை, கைக்குத்தல் அரிசி ஆகிய கைத்தொழில்களின் அபிவிருத்திக்கு பம்பாய், சென்னை, மைசூர், ஜம்மு, காஷ்மீர் மாநிலங்களின் திட்டங்களுக்கு மத்திய அரசாங்கம் உதவி நிதியளித்துள்ளது.

சென்னைக்கு பழுப்பு சர்க்கரை உற்பத்திக்காக ரூ. 1,12,450; கைக்குத்தல் அரிசி அபிவிருத்திக்கு ரூ. 17,000 அனுமதியளிக்கப்பட்டிருக்கிறது.

ஓட்டல் தொழிலாளர்

தி. மு. கழகத் தேர்தல் நிதிக் குழு அமைப்பு

சென்னை, பிப். 14—

தி. மு கழகத் தேர்தல் நிதி அளிப்பதென அண்மையில் சென்னை ஓட்டல் தொழிலாளர்கள் முடிவு செய்திருந்ததை ஒட்டி, கடந்த 7-ந் தேதி சென்னை 14-வது வட்டத் தி. மு. கழக இல்லத்தில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டம் ஒன்றில், வருகிற 24-ந் தேதி ஒரு பொதுக்கூட்டம் நடத்தி அக்கூட்டத்தில் தி. மு கழகத் தேர்தல் நிதி அளிப்பதெனவும், அதற்கான பொறுப்புகள் தேர்தல் நிதிக் குழுவினரிடம் அளிப்பதெனவும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

அண்ணா காட்டும் உவமை

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கிடகிருஷ்ணா ரெட்டியார் ஓடினா—இப்படி பல் தலைவர்கள் பலபேர் ஓடினார்கள்.

'ஓடுகின்றார்கள் ஓடுகின்றார்கள் என்றால், போய் சுமமா விட இல்லை! எப்படி ஒரு வைத்தியக்காரனுடைய பிடியிலிருந்து தப்பித்துக்கொண்டுவந்தால் தொலைவிலே இருந்துகொண்டு, அவன் மற்றவர்கள் மேலே பாயாமல் இருப்பதற்குப் வைத்தியக்காரனைக் கல்லால் அடிப்பார்களோ, அது போல ஜெயராம ரெட்டியாரும், வெங்கிட கிருஷ்ணா ரெட்டியாரும், வி. கே. இராமசாமி முதலியாரும் மற்றவர்களும் அந்தப் பிடியிலிருந்து தப்பித்துக்கொண்டு வந்து வெளியில் நின்று கல்லை எடுத்து அந்தப் வைத்தியத்தை அடிப்பதுபோல் அந்தக் காங்கிரஸையே எதிர்க்கிறார்கள்.

"இந்த வகையிலே சிந்தித்துக்கொண்டு வருகிற காங்கிரஸ் கட்சியை நீங்கள் மறுபடியும் மறுபடியும் பீடத்தில் அமர்த்தினால் எப்படி நமக்கு நியாயம் கிடைக்கும்? எங்கிருந்து நமக்கு நீதி கிடைக்கும்? அப்படியானால், காங்கிரஸ் கட்சியினிடத்தில் இருக்கிற அதிகாரம் சாதாரணமானதா என்றால், டில்லியிலே அவர்கள் ஆட்சி நடத்துகின்ற வரையில்—டெல்லிக்கும் சென்னைக்கும் சம்பவி இருக்கிற வரையில், அவர்களிடம் குவிந்திருக்கிற அதிகாரம் அமோகமானது. நமக்கு இருக்கின்ற சர்க்கார் ஒன்றல்ல; இரண்டு சர்க்கார்கள் நம்மை ஆளுகின்றன. இதை நீங்கள் தெரிந்து கொள்ளவேண்டும். ஒன்று 'பெரிய' சர்க்கார்—பெரிய சர்க்கார்—டெல்லியில் இருப்பது! மற்றொன்று, 'சோட்டே' சர்க்கார்—சின்ன சர்க்கார்—சென்னையிலே இருப்பது! சென்னையில் இருக்கிற சர்க்காருக்குத் தலைவர் காமராசர்! டெல்லியிலே இருக்கிற சர்க்காருக்குத் தலைவர் ஜவகர்லால் நேரு! காமராசர் சர்க்காருக்கு இருக்கிற வேலை நம்முடைய மடிமடியிலே கையைப் போட்டு வரியை வாங்குவது! டெல்லியிலே இருக்கிற சர்க்காருக்கு வேலை காமராசர் கையைத் தட்டிப் பறித்து அந்தப் பணத்தைப் பிடுங்கிக் கொண்டு போவது!

'ஜீவாதார உரிமைகள் சனநாயக முன்னணி'

கொழும்பு, பிப். 13—

தீண்டாமை ஒழிப்பு—சமூகத்தில் மனிதனை மனிதன் இழிவுபடுத்தும் நிலையை அகற்றுவதற்கும், மதம், மொழி, பண்பாடு சனநாயக உரிமைகளைப் பாதுகாக்கவும், இலங்கை—யாழ்ப்பாணத்தில் ஒரு புதிய அரசியல் கட்சி உருவாக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கட்சியின் பெயர் ஜீவாதார உரிமைகள் சனநாயக முன்னணி.

தமிழர்கள் மீது சிங்கள மொழியைத் திணிக்கும் முயற்சியை நிறுத்துமாறு கோரி இந்த முன்னணி ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது.

பொதுத் தேர்தல்

பிப். 24-ந் தேதி முதல் வாக்குப் பதிவு ஆரம்பம்

புதுடில்லி, பிப். 14—

இத்திங்கள் 24-ந் தேதியிலிருந்தே இந்தியாவில் இரண்டாவது பொதுத் தேர்தல்கள் ஆரம்பமாகிவிடுகிறது! இந்தத் தேர்தல்களின்போது மொத்தம் 19 கோடி மக்கள் வாக்களிக்க இருக்கிறார்கள்.

தேர்தல் நடைபெறும் நாட்களுள் பிப்ரவரி மாதம் 25-ந் தேதி தான் நாடு முழுமையிலுமாகப் பரவலாகப் பெருமளவில வாக்குப் பதிவு நடைபெறும் என்றும் அன்று 9 மாநிலங்களைச் சேர்ந்த 594 தொகுதிகளிலும், மற்றும் மத்திய சர்க்காரின் நிர்வாகத்திலடங்கிய வாக்குப் பதிவு இரண்டு பிரதேசங்களிலும் நடைபெறும் என்றும் தெரிகிறது.

மக்கள் சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய மொத்த உறுப்பினர் எண்ணிக்கை 494. இவர்களில் 76 தாழ்த்தப்பட்ட வகுப்பினரும் 31 தாழ்த்தப்பட்ட மலைசாதியினரும் அடங்கியிருப்பர் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

★

தமிழ் நாட்டில் தேர்தல் ஏற்பாடுகள் பற்றி தகவல்

தரப்படும் வாக்குச் சீட்டுகள் புதுமாதிரியாக இருக்குமாம்

சென்னை, பிப். 14—

வருகிற திங்களில் சென்னை மாநிலத்தில் நடைபெற இருக்கும் பொதுத் தேர்தல் குறித்து எல்லாவித ஏற்பாடுகளும் முடிவடைந்துவிட்டனவாம். மாநில முழுமையிலுமுள்ள தொகுதிகள் அனைத்துக்கும் வாக்குச் சீட்டுகள் அனுப்பப்பட்டுவிட்டன என்றும், வாக்குப் பதிவு நிலையங்கள், பெண்களும் ஆண்களும் தனித்தனியாகப் பதிவு செய்யும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன என்றும் கூறப்பட்டிருக்கிறது. இத்தகைய ஏற்பாடுகள் குறித்து எல்லா மாவட்டத் தேர்தல் அதிகாரிகளுக்கும் மாநிலப் பிரதம தேர்தல் அதிகாரி உத்தரவுகள் பிறப்பித்திருக்கிறாராம்.

இந்தத் தேர்தலில் தரப்படுகின்ற வாக்குச் சீட்டுகள், சென்ற தேர்தலின்போது தரப்பட்டதுபோல் இல்லாமல் புதுமாதிரியாக இருக்கும் என்றும் தெரிகிறது.

ஆச்சரியந்தான்!

ஜோர்ஹத், (அசாம்), பிப். 12—

ஜோர்ஹத் செஷன்ஸ் நீதிபதி அலுவலகத்தைச் சேர்ந்த சோமநாத் என்ற உதவித் தலைமை குமாஸ்தா முப்பது வருட சேவைக்குப் பிறகு கடந்த பிப்ரவரி 1-ந் தேதியன்று வேலையிலிருந்து ஓய்வெடுத்துக் கொண்டிருக்கிறார்.

அவர் இந்த 30 ஆண்டுகளில் ஒரு நாள்கூட எந்தவித லீவும் எடுத்ததில்லையாம்!

அண்ணா

சுற்றுப்பயணம்

★

பிப். 15: மாலை 6 மணி: திருவண்ணாமலை; இரவு 10 மணி: வாணியம்பாடி;

பிப். 16: மாலை திருச்செங்கோடு, சங்ககிரி பொதுக் கூட்டங்கள். இரவு 10 மணிக்கு நாமக்கல் (சேலம்) 'சந்திரோதயம்' நாடகம்.

பிப். 17 மாலை: சேந்தமங்கலம் (சேலம்) இராசிபுரம் தொகுதிகளில் பொதுக்கூட்டங்கள்; இரவு 10 மணிக்கு ஆத்தூர் 'சந்திரோதயம்'—நாடகம்;

பிப். 18: மாலை 6 மணி: பொன்னேரி. இரவு 9 மணிக்கு மீஞ்சூர் பொதுக் கூட்டம்.

பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன்

நிகழ்ச்சிகள்

16-2-57 மாலை 6 மணிக்கு, பூந்தமல்லியிலும், இரவு 8 மணிக்கு பரந்தூர் கிராமத்திலும் நடைபெறும் தேர்தல் பொதுக்கூட்டங்களில் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் கலந்துகொள்ளுவார்.

தேர்தல் கூட்டங்கள்

★

சென்னை—ஓட்டேரி:

17—2—57 மாலை 6-மணிக்கு சென்னை—ஓட்டேரி மயான பூமி சமீபத்தில், சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் மன்றச் சார்பில், தொகுதி அபேட்சகர் தோழியர் சத்தியவாணி முத்து அவர்களை ஆதரித்துத் தோழர் ஏ. மதனகோபால் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர் க. அன்பழகன், வி. எஸ். கோவிந்தராசன், மாணவி சற்குணம் ஆகியோர் பேசுவர்.

* * *

17—2—57 மாலை 6-30 மணியளவில் சென்னை மெமோரியல் ஹால் தெருவில் (சென்டிரல் அருகில்) 28-வதுவட்டத் தி. மு. கழகச் சார்பில் தோழர் கே. எம். மணி தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர்கள் பி. பாலசுப்பிரமணியம், க. அன்பழகன், தோழியர் சத்தியவாணிமுத்து ஆகியோர் பேசுவர்.

சங்ககிரி தொகுதிக் குழுக் கூட்டம்

15—2—57 மாலை 2-30 மணிக்கு மகுடஞ்சாவடி தி. மு. கழகப் பணிமனையில் சங்ககிரி தொகுதிக் குழுக் கூட்டம் நடைபெறும். சங்ககிரி தொகுதி தி. மு. கழக உறுப்பினர்கள், மற்றுமுள்ள மன்றத் தோழர்கள், ஆதரவாளர் அனைவரும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

மிகப் பெரிய அணுசக்தி நிலையம் உருவாகுமாம்!

ஸ்காட்லந்தில், ஹண்டர்ஸ்டன் என்னுமிடத்தில் சுமார் 3,70 00,000 பவுன் செலவில், அணுசக்தி மின்விசை நிலையம் ஒன்றை நிறுவுவதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறதாம்.

இந்த நிலையத்தில் $1\frac{1}{2}$-இலட்சம் கிலோவாட் மின்சாரம் தரக்கூடிய இரண்டு அணு உலைகளை நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறதாம்.

ஆண்டுக்கு, 40 இலட்சம் பவுன் மதிப்புள்ள மின்சாரம் இங்கு உற்பத்தியாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

தி. மு. கழகத் தேர்தல் நிதிக்காக

சென்னை தங்கசாலை கிருஷ்ணா டாக்கீசில்
17—2—57 ஞாயிறு காலை 10-மணிக்கு
கிருஷ்ணா பிக்சர்ஸ்

'மதுரை வீரன்'

புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன்
கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன்
செந்தமிழ் விறலி டி. ஏ. மதுரம்
மேடையில் தோன்றுவர்
★
பேராசிரியர் க. அன்பழகன் அவர்களிடம்
தேர்தல் நிதி அளிக்கப்படும்
கட்டணம் வழக்கம்போல்

புதுவை வட்ட தி. மு. கழக உறுப்பினர்கட்கு:

"17-2-57 காலை 9-மணிக்கு புதுவை வட்டத் தி. மு. கழக உறுப்பினர் கூட்டம், தெ. ஆ. மாவட்டச் செயலாளர் தோழர் ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ. அவர்கள் தலைமையில் நடைபெறும். அதுபோது, வட்டத்திலுள்ள எல்லாக் கிளை உறுப்பினர்களும் அவசியம் கலந்து கொள்ள வேண்டுகிறேன்" என்று, புதுவை வட்டத் தி. மு. கழகச் செயலாளர் ச. சிவப்பிரகாசம் அறிவிக்கிறார்.

எழும்பூர் தொகுதி தி.மு.க. தோழர்கட்கு:

15—2—57 மாலை 5 மணிக்கு, மெமோரியல் ஹால் தெருவில் விருந்து, தோழர் க. அன்பழகனை ஆதரித்து வேலை வகுப்பு படும் எழும்பூர் தொகுதியைச் சேர்ந்த கிளைக் கழகத் தோழர்கள், மன்றங்கள் படிப்பகங்களைச் சார்ந்த தோழர்கள் அனைவரும் தவறாது கொடிகளுடன் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தேர்தல் கூட்டங்கள்

★

குன்னத்தூர்:

17—2—57 இரவு 7 மணிக்கு குன்னத்தூர் தேர்த் திடலில் தி. மு. கழகச் சார்பில் தேர்தல் நிதியளிப்பும், பிரச்சாரப் பொதுக்கூட்டமும் தோழர் மு. முத்துரத்தினம் தலைமையில் நடைபெறும். தோழர்கள் ஏ. வி. பி. ஆசைத்தம்பி, க. அன்பரசு பேசுவர்.

மட்டியூர்:

16—2—57 மாலை 5 மணிக்கு, மட்டியூரில் தோழர் எஸ் எம் டி மூர்த்தி தலைமையில் நடைபெறும். தோழர்கள் பொ. தருமன், ம. கோ. மணி, கே. சி. மணி, காளிதாசன், இராதாகிருஷ்ணன், சா. பிச்சை ஆகியோர் பேசுவர்.

★

ஆடுதுறை தொகுதியில்:

தோழர் பொ. தருமன் முதலானோர் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகள்:—

பிப். 15: சிற்றிடையா நல்லூர்; 16: மட்டியூர்; 17: மணக்குடி; 18: மதகுசாலை; 19: செய்கருணை; 20: அணைக்கரை; 21: சிக்கல்நாயகன் பேட்டை; 22: திருமங்கைச்சேரி.

திருத்துறைப்பூண்டி தொகுதியில்:

தோழர் அ. மீ. அவிசேக் மன்சூர் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகள்:—

பிப். 15: தோப்புத்துறை; 16: கட்டிமேடு.

அறிவிப்பு

"சிவகாசி, திருநெல்வேலி ஆகிய ஊர்களில் பிப்ரவரி 16, 17-ந் தேதிகளில் தி. மு. கழகத் தேர்தல் நிதிக்காக அண்ணா அவர்களும் இராசேந்திரன் நாடக மன்றத்தாரும் சேர்ந்து நடிக்கும் 'சந்திரமோகன்' நாடகம் தவிர்க்க முடியாத காரணங்களால் ஒத்திவைக்கப்பட்டு, பிப் 23, 24-ந் தேதிகளில் நடைபெறும்" என்று தோழர் எஸ். எஸ். இராசேந்திரன் அறிவிக்கிறார்.

திருப்பூர் ஆலைத் தொழிலாளர்கட்கு:

16—2—57 மாலை 5 மணிக்கு, திருப்பூர் டிராவலர்ஸ் பங்களாவில் தி. மு. கழக ஆலைத் தொழிலாளர் தேர்தல் நிதிச் செயற்குழுக் கூட்டம் நடைபெறும். அனைவரும் தவறாது வருகை தரக் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

முதுகுளத்தூரில் பொங்கல் விழா

17-2-57 மாலை 4 மணிக்கு, முதுகுளத்தூர் அண்ணா திடலில் (சுப்பிரமணியசாமி கோவில் முன்பு) தி. மு. கழகச் சார்பில் பொங்கல் விழாக்கூட்டம் தோழர் எம். செந்தூர் பாண்டியன் தலைமையில் நடைபெறும். தோழர் எஸ். கிருஷ்ணன் கழகக் கொடியேற்றுவார். தோழர் கே. கந்தசாமி பரிசு வழங்குவார். தோழர்கள் கே. ஏ. மதியழகன், எம். எஸ். இராமசாமி மற்றும் பலர் சொற்பொழிவாற்றுவர். மாலை 3 மணிக்கு ஊர்வலமும் தோழர் ஏ. என். எச். யாசின் அவர்களது இசை நிகழ்ச்சியும் நடைபெறும்.

ஏ. கே. வில்வம்

நிகழ்ச்சிகள்

பிப் 14: சோளூர்
15: ஆற்காடு
16: கடலூர்
17—21: வடஆர்க்காடு
22, 23: கள்ளக்குறிச்சி
24, 25: விழுப்புரம் தொகுதி
26, 27: விருத்தாசலம்
28, 29: சிதம்பரம்
மார்ச்: 1: கோவை

முகவரி மாற்றம்

ஆ. திராவிடமணி
திராவிட முன்னேற்றக் கழகம்,
கடையநல்லூர்,
நெல்லை மாவட்டம்.

தி. மு. க. வில்லை (பாட்ஜ்)



அருகில் உள்ள படத்தில் காணப்படும் அளவில், இருவண்ணங்களில் பிளாஸ்டிக் வில்லை (பாட்ஜ்) கள், தி. மு. கழகத் தோழர்களும் ஆதரவாளர்களும் அணிந்துகொள்வதற்கு ஏற்றவகையில் தயாரிக்கப்பட்டிருக்கின்றன

ஒன்றின் விலை அணா 5.

கழகத் தோழர்கள் உடனே பொதுச்செயலாளர் தலைமைக் கழகம், தி. மு. க., 'அறிவகம்' சென்னை-13' என்ற முகவரிக்குப் பணம் அனுப்பிப் பெற்றுக்கொள்ள வேண்டப்படுகிறார்கள்.

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அறிவு அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.